GCI

# பாடம் 5
# பரிசுத்த ஆவியானவர்
## நம் நெருங்கிய நண்பர்

<u>முன்னுரை</u>:

நோக்கம்:

- ஆவியானவருடைய ஆள்தத்துவத்தை குறித்த வேத வசனங்களை கற்றுக்கொள்ள
- ஒரு தேவபிள்ளையின் வாழ்க்கையில் ஆவியானவரின் செயல்களை குறித்து நன்றாக அறிந்து கொள்ள

<u>பாடதிட்டம்:</u>

1. உங்கள் துணையாளர்

அ. ஒரு நண்பர்
ஆ. நண்பர் – நாம் மனம் விட்டு பேசக்கூடிய ஒரு நபர்
இ. அவர் எப்படி பேசுவார்

2. நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்

அ. ஆவியானவர் ஒரு நபர் – தனிநபர்
ஆ. ஆவியானவர் தேவனாகிய கர்த்தர், ஆண்டவர்

3. …உங்களுடன், …உங்களுக்குள்

அ. உங்களுக்குள் இருப்பவர் யார்?
ஆ. பரிசுத்த ஆவியானவரின் செயல்பாடுகள்

4. உங்கள் போதகர்

அ. உங்களுக்கு போதிப்பார்

5. உங்கள் வழிகாட்டி

அ. உங்களுக்கு வழிகாட்டி நடத்திச் செல்வார்
ஆ. அவர் நமக்கு போதகராக வழிகாட்டியாக இருக்க நாம் அவருடன் அதிகம் பேச வேண்டும்.

6. இயேசுவை மகிமைபடுத்துங்கள்

அ. இயேசுவை மகிமைபடுத்துங்கள் – அவர் மகிமையை நோக்கி பார்த்து
ஆ. இயேசுவை மகிமைபடுத்துங்கள் – ஆவியில் நிறைந்து

GCI

## இ. இயேசுவை மகிமைபடுத்துங்கள் – அவர் வல்லமையால்

7. அவர் பாவத்தை உணரவைக்கிறார்.

8. மனந்திரும்பவும் மறுபடியும் பிறக்கவும் செய்கிறார்.

9. பாவம் மரணம் போன்ற வல்லமைகளிடமிருந்து நம்மை விடுதலையாக்குகிறார்.

10. இரட்சிப்பின் நிச்சயத்தை நமக்கு அளிக்கிறார்.

11. சாவுக்குட்பட்ட நம் சரீரங்களுக்கு ஜீவனை அளிக்கிறார்.

12. நம்முடைய ஜெபங்களுக்கு வல்லமையளிக்கிறார்.

13. நம்முடைய துதி ஆராதனையை உயிர்ப்பிக்கிறார்.

14. நம்முடைய ஊழியத்திற்கான வல்லமையை தருகிறார்.

1) ஊழியத்திற்கான அபிஷேகம்
2) பழைய ஏற்பாட்டில் ஆவியானவரால் வல்லமை பெறுதல்
3) சுவிசேஷங்களில் ஆவியானவரால் வல்லமை பெறுதல்
4) யோவான் ஸ்நானகன் இயேசுவை குறித்து கூறிய அறிக்கை
5) பரிசுத்த ஆவியானவருடன் இயேசு கிறிஸ்து
6) பரிசுத்த ஆவியானவரைக் குறித்த இயேசு கிறிஸ்துவின் போதனை
7) மூன்று வருடங்களுக்கு பின் சீஷர்களின் நிலை
8) உயிர்த்தெழுத- ன் நாளின் நிகழ்வுகள்
9) சிலுவைக்குப் பின்...
10) சிலுவைக்கு பின் பரிசுத்த ஆவியானவரின் நிரப்புதல்
11) விளைவுகள்
12) பரிசுத்த ஆவியானவரின் மற்ற செயல்பாடுகள்
13) பரிசுத்த ஆவியானவரை பெற்று கொள்ளுதல்

GCI

# 1. உங்கள் துணையாளர்

கிரேக்க பதத்தில் *பாராகிலீட்டோஸ்,* என்பதற்கு உதவிக்காக அருகில் கூடவே இருப்பவர், என்று பொருள்.

யோவான் 14:16-17

நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்.

உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும். இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ளமாட்டாது; அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள்.

***அ. ஒரு நண்பர்***

நீதி 18:24; 17:17; யோவான் 15:15

இனி நான் உங்களை ஊழியக்காரரென்று சொல்லுகிறதில்லை, ஊழியக்காரன் தன் எஜமான் செய்கிறதை அறியமாட்டான். நான் உங்களைச் சிநேகிதர் என்றேன், ஏனெனில் என் பிதாவினிடத்தில் நான் கேள்விப்பட்ட எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன்.

***ஆ. நண்பர் – நாம் மனம் விட்டு பேசக்கூடிய ஒரு நபர்***

2கொரி 13:14

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும், உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்.

***இ. அவர் எப்படி பேசுவார்***

| | |
|---|---|
| 1. நம் ஆவியுடனே பேசுவார் | ரோமர் 8:16 |
| 2. வேத வசனம் வழியாய் பேசுவார் | எபி 10:15-17 |
| 3. தீர்க்கதரிசனம், தரிசனம். சொப்பனம் | அப் 2:16-17; ஆபகூக் 1:2-3 |
| 4. வெளிப்பாடு | 1கொரி 2:9-12; யோவான் 16:13-14 |

1கொரி 2:9-12

எழுதியிருக்கிறபடி: தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷருடைய இருதயத்தில் தோன்றவுமில்லை;

நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார்.

GCI

மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷருக்குரியவைகளை அறிவான்? அப்படிப்போல, தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான்.

நாங்களோ உலகத்தின் ஆவியைப் பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்குத் தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம்.

# 2. நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்

யோவான் 14:17

உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும். இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ளமாட்டாது; அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள்.

அநேக கிறிஸ்தவ சபைகளிலே ஆவியானவர் முழுமையாக அசட்டை செய்ய படுகிறார். அவர் இருப்பதும் இல்லாததும் எந்த மாற்றத்தையும் காட்டுவதில்லை.

- A.W. டோசர்

அநேக கிறிஸ்தவர்கள் வெறுமனே பரிசுத்த ஆவியானவர் என்று ஒருவர் இருக்கிறார் என்று மட்டும் கேள்விப்பட்டிருக்கிறார்கள்.

ஆனால் நீங்கள் அவரை நன்றாக அறிந்திருக்கிறீர்களா?

நாம் அறிந்து, அன்புகூர்ந்து ஆராதிக்கிற ஒரு நெருங்கிய உறவுள்ள ஒரு தெய்வீக நபர். அப்படிப்பட்டவரை அவரை நன்றாக அறிந்திருக்கிறீர்களா?

அறிந்து கொள்ளுதல் என்பது வெறும் காகிதத்தில் இருந்து படிப்பது மாத்திரமல்ல, அனுபவத்தில் உணர்வது.

ஒருவரை குறித்து கேள்விப்படுவது ஒன்று. ஆனால் நம்முடைய தனிப்பட்ட வாழ்வில் நன்றாக தெரிந்து அறிந்து கொள்வது மற்றொன்று.

***அ. ஆவியானவர் ஒரு நபர் — தனிநபர்***

| | |
|---|---|
| 1. தனி சிந்தை, சித்தம் | ரோ 8:27; 1கொரி12:11 |
| 2. துக்கப்படுகிறார் | ஏசா 63:8-14; எபே 429-32 |
| 3. தணித்து அல்லது அவித்து போடப்படுவார் | 1தெச 5:19 |
| 4. எதிர்த்து நிற்கப்பட்டார் | அப் 7:51 |
| 5. நிந்திக்கப்படுவார் | எபி 10:29 |
| 6. அவரிடம் பொய் சொன்னார்கள் | அப் 5:3 |

GCI

7. தூஷிக்கப்படுகிறார் மாற்கு 3:28-29

மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: மனுஷர்கள் செய்யும் எல்லாப் பாவங்களும், அவர்கள் தூஷிக்கும் எந்தத்தூஷணங்களும், அவர்களுக்கு மன்னிக்கப்படும்;

ஒருவன் பரிசுத்த ஆவிக்கு விரோதமாகத் தூஷணஞ்சொல்வானாகில், அவன் என்றென்றைக்கும் மன்னிப்படையாமல் நித்திய ஆக்கினைக்குள்ளாயிருப்பான் என்றார்.

7. வைராக்கிய வாஞ்சையாயிருக்கிறார். யாக் 4:4-5

## ஆ. ஆவியானவர் தேவனாகிய கர்த்தர், ஆண்டவர்

2கொரி 3:17; யோவான் 4:24; அப் 5:3-4

2கொரி 3:17

எழுத்துகளினால் எழுதப்பட்டுக் கற்களில் பதிந்திருந்த மரணத்துக்கேதுவான ஊழியத்தைச் செய்த மோசேயினுடைய முகத்திலே மகிமைப்பிரகாசம் உண்டானபடியால், இஸ்ரவேல் புத்திரர் அவன் முகத்தை நோக்கிப் பார்க்கக்கூடாதிருந்தார்களே.

யோவான் 4:24

தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும் என்றார்.

1. சர்வ வியாபி சங் 139:7-10 (ஒரு ஆவியால் முடியாது)

2. சர்வ வல்லவர் யோவான் 6:63; 2கொரி 3:6; யோபு 33:4

யோவான் 6:63

ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது; நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது.

3. சர்வஞானி 1கொரி 2:9-12

4. நித்தியமானவர் எபி 9:14

நீங்களே தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்கள் (பரிசுத்த ஆவியானவர்) 1கொரி 3:16-17

ஆவியானவர் இவ்வாறாக உணரப்பட்டு அங்கீகரிக்கப்படுகிறாரா?

ஆவியானவர் நம்மால் ஆராதிக்கப்படுகிறாரா?

GCI

# 3. உங்களோடு..., உங்களுக்குள்

யோவான் 14:7

உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும். இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ளமாட்டாது; அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள்.

யோவான் 7:37, 38

பண்டிகையின் கடைசிநாளாகிய பிரதான நாளிலே இயேசு நின்று, சத்தமிட்டு: ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம்பண்ணக்கடவன்.
வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார்.

ரோமர் 8:9

தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல.

***அ. உங்களுக்குள் இருப்பவர் யார்?***

| | |
|---|---|
| 1. பிதாவின் ஆவி | மத் 10:20 |
| 2. இயேசுவின் ஆவி | அப் 16:7 |
| 3. கர்த்தரின் ஆவி | ரோமர் 8:9 |
| 4. கிறிஸ்துவின் ஆவி | ரோமர் 8:9; 1பேதுரு 1:11 |
| 5. குமாரனின் ஆவி | கலா 4:6 |
| 6. இயேசுகிறிஸ்துவின் ஆவி | பி- 1:19 |
| 7. பரிசுத்தத்தின் ஆவி | ரோமர் 1:4 |
| 8. கிருபையின் ஆவி | எபி 10:29 |
| 9. மகிமையின் ஆவி | 1பேதுரு 4:14 |
| 10. உண்மையின் ஆவி | யோவான் 16:3; ஏசா 11:2-3 |
| 11. புத்திரசுவிகாரத்தின் ஆவி | ரோமர் 8:15 |
| 12. ஜீவனுடைய ஆவி | ரோமர் 8:2 |
| 13. விசுவாசத்தின் ஆவி | 2கொரி 4:13 |

***ஆ. பரிசுத்த ஆவியானவரின் உவமைச் சின்னங்கள்***

GCI

வெறும் வார்த்தைகளை வைத்து சத்தியத்தை விளக்குவது சில நேரம் மிகக் கடினம். சின்னங்கள் அல்லது படங்கள் நமக்கு நன்றாக சத்தியத்தை விளக்குகிறது.

1. அக்கினி - அவரது சுட்டெரிக்கிற, தூய்மையாக்குகிற வல்லமையை குறிக்கிறது.

லூக்கா 3:16; அப் 2:3; ஏசா 6:1-7

லூக் 3:16-17

யோவான் எல்லாருக்கும் பிரதியுத்தரமாக: நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கிறேன், என்னிலும் வல்லவர் ஒருவர் வருகிறார், அவருடைய பாதரட்சைகளின் வாரை அவிழ்க்கிறதற்கும் நான் பாத்திரன் அல்ல, அவர் பரிசுத்தஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுப்பார்.

தூற்றுக்கூடை அவர் கையில் இருக்கிறது, அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி, கோதுமையைத் தமது களஞ்சியத்தில் சேர்ப்பார்; பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார் என்றான்.

2. காற்று — அவரது கண்ணுக்கு புலப்படாத, நம்மை அவர் வழியில் நடத்துகிற வல்லமையை குறிக்கிறது.

யோவான் 3:8

காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறது, அதின் சத்தத்தைக் கேட்கிறாய், ஆகிலும் அது இன்ன இடத்திலிருந்து வருகிறதென்றும், இன்ன இடத்துக்குப் போகிறதென்றும் உனக்குத் தெரியாது; ஆவியினாலும் பிறந்தவனெவனோ அவனும் அப்படியே இருக்கிறான் என்றார்.

3. தண்ணீர் - விசுவாசிகளை நிரம்பி வழிகிற ஆவிக்குரிய வாழ்வில் நடத்த கழுவுகிற, தூய்மையாக்குகிற வல்லமையை குறிக்கிறது.

1கொரி 6:11; தீத்து 3:5; யோவான் 7:37-39

தீத்து 3:5

நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்.

4. முத்திரை — அவருக்கு நம் மேல் உள்ள உரிமையை காட்டுகிறது. இது ஒரு முடிவு பெற்ற, நித்தியமான நடவடிக்கை

எபே 1:13

நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட பரிசுத்தஆவியால் அவருக்குள் முத்திரைபோடப்பட்டீர்கள்.

GCI

5. எண்ணெய் — ஊழியத்திற்காகவும், அற்புத சுகத்திற்காகவும் அபிஷேகிக்கிற வல்லமையைக் குறிக்கிறது.

அப் 10:38; மாற்கு 6:13
அப் 10:38
நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்தஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம்பண்ணினார்; தேவன் அவருடனேகூட இருந்தபடியினாலே அவர் நன்மைசெய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார்.

6. புறா — அவருடைய மென்மையான, பரிவுமிக்க, சமாதானம் நிறைந்த தன்மையை காட்டுகிறது.

லூக் 3:22

பரிசுத்த ஆவியானவர் ரூபங்கொண்டு புறாவைப்போல அவர்மேல் இறங்கினார். வானத்திலிருந்து ஒரு சத்தமும் உண்டாகி: நீர் என்னுடைய நேசகுமாரன், உம்மில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது.

## 4. உங்கள் போதகர்

யோவான் 14:26

என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்.

அ. எதை போதிப்பார்

1. வேதம் 2பேதுரு 1:21
2. ஜெபிக்க ரோமர் 8:26-27
3. தேவன் உங்களுக்கு அளித்ததை 1கொரி 2:9-16
4. வரப்போகிற காரியங்களை 1நாளா 12:32

இசக்கார் புத்திரரில், இஸ்ரவேலர் செய்யவேண்டியது இன்னதென்று அறிந்து காலாகாலங்களுக்குத் தகுந்த யோசனை சொல்லத்தக்க தலைவர்கள் இருநூறுபேரும், இவர்கள் வாக்குக்குச் செவிகொடுத்த இவர்களுடைய எல்லாச் சகோதரருமே.

5. எப்படி ஊழியம் செய்வது 1கொரி 2:4-5

உங்கள் விசுவாசம் மனுஷருடைய ஞானத்திலல்ல, தேவனுடைய பெலத்தில் நிற்கும்படிக்கு,

என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்பட்டதாயிருந்தது.

GCI

6. என்ன பேசுவது அப் 6:10; மத் 10:20

பேசுகிறவர்கள் நீங்கள் அல்ல, உங்கள் பிதாவின் ஆவியானவரே உங்களிலிருந்து பேசுகிறவர்.

# 5. உங்கள் வழிகாட்டி

யோவான் 16:13

சத்தியஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்.

ரோமர் 8:14

மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்.

***அ. உங்களுக்கு வழிகாட்டி நடத்துவார்***

1. எங்கே நீங்கள் ஊழியம் செய்ய விரும்புகிறாரோ அப் 8:29; 10:19

2. நீதியிலே நடத்துவார் யோவான் 16:8

***ஆ. அவர் நமக்கு போதகராக வழிகாட்டியாக இருக்க நாம் அவருடன் அதிகம் பேச வேண்டும்.***

ரோமர் 8:6

மாம்சசிந்தை மரணம்: ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம்.

நம் சிந்தையை அவர் மேல் பதிக்க வேண்டும்

1. ஆவியானவர் வெளிப்படுத்தின போது இயேசு கிறிஸ்து பேசினார். அப் 1:2

2. பி- ப்புடன் பேசினார் அப் 8:29

3. பேதுருவுடன் பேசினார் அப் 10:19

4. அவர்களிடம் பேசினார் அப் 13:2

5. அவர் தீர்க்கதரிசிகள் மூலமாய் பேசினார் அப் 28:25

6. ஆவியானவர் சொல்கிறதை காதுள்ளவன் கேட்கக்கடவன். வெளி 2:7, 11,17,29

GCI

# 6. இயேசுவை மகிமைபடுத்துங்கள்

யோவான் 15:26

பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப்போகிறவரும், பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும்போது, அவர் என்னைக்குறித்துச் சாட்சி கொடுப்பார்.

யோவான் 16:14

அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார்.

### *அ. இயேசுவை மகிமைபடுத்துங்கள் – அவர் மகிமையை நோக்கி பார்த்து*

இயேசுவோடு நெருங்கிய தொடர்பு கொள்ள பரிசுத்த ஆவியானவருடன் அதிக நெருங்கிய தொடர்பு தேவை.

1. தேவனின் மகிமை 2கொரி 3:7-8; 17-18

2. கர்த்தரின் மகிமையை நோக்கி பாருங்கள் யோவான் 17:24

பிதாவே, உலகத்தோற்றத்துக்கு முன் நீர் என்னில் அன்பாயிருந்தபடியினால், நீர் எனக்குத் தந்த என்னுடைய மகிமையை நீர் எனக்குத் தந்தவர்கள் காணும்படியாக, நான் எங்கே இருக்கிறேனோ அங்கே அவர்களும் என்னுடனேகூட இருக்க விரும்புகிறேன்.

3. எனவே நாம் ஆவியானவருடன் ஐக்கியம் கொண்டிருக்க வேண்டும். 2 கொரி 13:14

4. நாம் ஆவியானவர் வெளிப்படுத்துகின்ற இயேசுவின் மகிமையை காண காண, நம்மை இயேசு மாற்றுகிறார்.

அதிக ஆவி ⇒ அதிக வெளிப்பாடு ⇒ அதிக மகிமை ⇒ அதிக மாற்றம்

2கொரி 3:18

நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்.

### *ஆ. இயேசுவை மகிமைபடுத்துங்கள் – ஆவியில் நிறைந்து*

1. ஒரு பாத்திரத்தை போல் அல்ல ஒரு படகைப் போல நிரப்பப்பட வேண்டும். எபே 5:18; யோவான் 3:8

எபே 5:18

துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறிகொள்ளாமல், ஆவியினாலே நிறைந்து;

GCI

2. எபே 5:19 — மாற்றங்கள்

**சிந்தை/பேச்சு**
**இதயம்/பாட்டு**
**மனப்பான்மை/நன்றி கூறுதல்**
**இயற்கை சுவாபம்/வேலைக்காரன்**

எபே 5:19,20,22,25

சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம்பண்ணி,

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரித்து,

மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல, உங்கள் சொந்தப் புருஷருக்குங் கீழ்ப்படியுங்கள்.

புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து,

**3. எபே 3:16-19 — அவருடைய ஆவி அன்பினால் தேவனின் பரிபூரணத்தினால் நிறைந்தது.**

**அதிக ஆவி ⇒ அதிக கிறிஸ்து ⇒ அதிக அன்பு ⇒ கர்த்தரின் நிறைவு ⇒ மற்றவர்கள் மாற்றப்படுவார்கள்**

எபே 3:16-19

நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவும்,

விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும், நீங்கள் அன்பிலே வேரூன்றி, நிலைபெற்றவர்களாகி,

சகல பரிசுத்தவான்களோடுங்கூடக் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து; அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகலபரிபூரணத்தாலும் நிறையப்படவும், அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே, உங்களுக்கு அநுக்கிரகம் பண்ணவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்.

**4. நாம் ஆவியினாலே நிறைந்து இருக்கும் போது அவருடைய ஆள்தத்துவம் — ஆவியின் கனிகள் நம் வாழ்வில் அதிகமாக செயல்படுத்தப்படும்.**

கலா 5:22

ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம்,

GCI

1. அன்பு, 2கொரி 5:14

அன்பு மாத்திரம் தான் தேவனுடைய சித்தத்தை நம் வாழ்வில் நடத்த முடியும். விசுவாசி அன்பினால் தூண்டப்படுகிறவராய், அன்பினால் ஆளுகை செய்யப்படுகிறவராய், அன்பனால் பலவந்தபடுத்தபடுகிறவராய் இருக்க வேண்டும்.

இல்லாவிட்டால் நாம் வெறும் மதச் சத்தமாகவே இருப்போம்.
1கொரி 13:1; யோவான் 15:12-13

2. சந்தோஷம், யோவான் 15:11; ரோ 14:17

அவருடைய அன்பில் தங்கியிருப்பதின் விளைவுதான் சந்தோஷம். அன்பின் பெலன்.

3. சமாதானம் யோ 14:27; 16:33; பி- ப்பியர், கொலோ 3:15

அவரில் வாசமாயிருப்பதின் விளைவுதான் சமாதானம்

4. பொறுமை 1கொரி 13:4

அன்பு பொறுமையாயிருக்கும், எதையும் சகிக்கும்

5. தயவு 1கொரி 13:4

அன்பு தயவுள்ளது. அன்பின் நடத்தையே தயவு.

6. நற்குணம் யோவான் 10:11; சங் 106:1; ரோ 2:7, 10; 12:21; கலா 6:10; 1பேது 3:11

அன்பின் குணம் நற்குணம். இயேசு சொல்கிறார், நானே *நல்ல* மேய்ப்பன்.

7. விசுவாசம் மத் 25:21; லுக் 16:10; வெளி 2:10

அன்பின் நிச்சயம். அர்ப்பணிப்பு.

8. சாந்தம். 2கொரி 10:1

அன்பின் தாழ்மை

9. இச்சையடக்கம்

அன்பின் வெற்றி
இதற்கு எதிரான நியாயப்பிரமாணம் எதுவும் இல்லை. ஆவியானவரால் கட்டுபடுத்தப்பட்ட மனிதன் நீதியாய் வாழ எந்த சட்டமும் தேவையில்லை.

ஆவியானவரால் கட்டுபடுத்தப்பட்ட வாழ்வின் இரகசியம் ரோமர் 12:1-2ல் சொல்லப்பட்டுள்ளது.

## இ. இயேசுவை மகிமைபடுத்துங்கள் – அவரது வல்லமையால்

1. பெரிய காரியங்கள் யோவான் 14:12, 16

GCI

2. ஆவியானவரின் செயலாக்கம் 1கொரி 2:4-5

3. எனது ஆவியினால் ஆகும் சகரி 4:6

பலம்: இயற்கையான தாலந்துகள் திறமைகள்

பராக்கிரமம்: நாம் சம்பாதிக்கக்கூடியவை. எ.கா. பணம், செல்வாக்கு

4. ஆவியின் வரங்கள்

1கொரி 12:7-11

ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது.

எப்படியெனில், ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே அறிவை உணர்த்தும் வசனமும்,

வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே விசுவாசமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே குணமாக்கும் வரங்களும்,

வேறொருவனுக்கு அற்புதங்களைச் செய்யும் சக்தியும், வேறொருவனுக்குத் தீர்க்கதரிசனம் உரைத்தலும், வேறொருவனுக்கு ஆவிகளைப் பகுத்தறிதலும், வேறொருவனுக்குப் பற்பல பாஷைகளைப் பேசுதலும், வேறொருவனுக்குப் பாஷைகளை வியாக்கியானம்பண்ணுதலும் அளிக்கப்படுகிறது.

இவைகளையெல்லாம் அந்த ஒரே அவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார்.

1. ஞானத்தை போதிக்கும் வசனம் 1கொரி 2:6-14

2. அறிவை உணர்த்தும் வசனம் அப் 5:3; 10:11-20; யோவான் 16:13

3. விசுவாசம் 2கொரி 4:13

4. குணமாக்கும் வரம் அப் 2:43; 3:6-8; 5:12-16

5. அற்புதங்களை செய்யும் வரம் அப் 19:11-12; 8:13

6. தீர்க்கதரிசனம் அப் 11:27-28; 21:10-11

7. ஆவிகளை பகுத்தறியும் வரம் அப் 16:16-18

8. அந்நிய பாஷையின் வகைகள்

அ. ஜெப பாஷை யூதா 20; 1கொரி14:2

ஆ. மனித பாஷை அப் 2:4-13

இ. அந்நியபாஷை வியாக்கியானம் 1கொரி 14:5, 13

GCI

## 7. அவர் பாவத்தை உணரவைக்கிறார்.

யோவான் 16:8-11

அவர் வந்து, பாவத்தைக்குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக்குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்.

அவர்கள் என்னை விசுவாசியாதபடியினாலே பாவத்தைக்குறித்தும்,

நீங்கள் இனி என்னைக் காணாதபடிக்கு நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினாலே நீதியைக்குறித்தும்,
இந்த உலகத்தின் அதிபதி நியாயந்தீர்க்கப்பட்டதினாலே நியாயத்தீர்ப்பைக்குறித்தும், கண்டித்து உணர்த்துவார்.

## 8. மனந்திரும்பவும் மறுபடியும் பிறக்கவும் செய்கிறார்

தீத்து 3:5

நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்.

யோவான் 3:5

இயேசு பிரதியுத்தரமாக: ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறாவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்.

யோவான் 3:8

காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறது, அதின் சத்தத்தைக் கேட்கிறாய், ஆகிலும் அது இன்ன இடத்திலிருந்து வருகிறதென்றும், இன்ன இடத்துக்குப் போகிறதென்றும் உனக்குத் தெரியாது; ஆவியினாலும் பிறந்தவனெவனோ அவனும் அப்படியே இருக்கிறான் என்றார்.

யோவான் 6:63

ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது; நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது.

1பேதுரு 1:23

அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே

GCI

## 9. பாவம் மரணம் போன்ற வல்லமைகளிடமிருந்து நம்மை விடுதலையாக்குகிறார்.

ரோமர் 8:2

கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே.

## 10. இரட்சிப்பின் நிச்சயத்தை நமக்கு அளிக்கிறார்.

ரோமர் 8:16

நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சிகொடுக்கிறார்.

1யோ 5:6

இயேசுகிறிஸ்துவாகிய இவரே ஜலத்தினாலும் இரத்தத்தினாலும் வந்தவர்; ஜலத்தினாலே மாத்திரமல்ல, ஜலத்தினாலும் இரத்தத்தினாலும் வந்தவர். ஆவியானவர் சத்தியமாகையால், ஆவியானவரே சாட்சிகொடுக்கிறவர்.

## 11. சாவுக்கேதுவான நம் சரீரங்களுக்கு ஜீவனை அளிக்கிறார்.

ரோமர் 8:11

அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்.

சாவுக்கேதுவான என்றால் சாவதற்கு கட்டுப்பட்ட என்று பொருள். இது நம் மாம்ச சரீரத்தை குறிக்கிறது. அவர் நமக்குள் வாசம் பண்ணும் போது ஜீவனையும், பெலனையும், சுகத்தையும், சத்துவத்தையும் நமக்குள் செலுத்துகிறார் (இது நம் வாழ் நாளை அதிகரிக்கிறது).

## 12. நம்முடைய ஜெபங்களுக்கு வல்லமையளிக்கிறார்

யூதா 20

நீங்களோ பிரியமானவர்களே, உங்கள் மகா பரிசுத்தமான விசுவாசத்தின்மேல் உங்களைஉறுதிப்படுத்திக்கொண்டு பரிசுத்தஆவிக்குள் ஜெபம்பண்ணி,

எபே 6:18

GCI

எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி, அதன்பொருட்டு மிகுந்த மனஉறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக்கொண்டிருங்கள்.

ரோமர் 8:26-27

அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல்செய்கிறார்.
ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறபடியால், இருதயங்களை ஆராய்ந்துபார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார்.

# 13. நம்முடைய துதி ஆராதனையை உயிர்ப்பிக்கிறார்

அப் 2:11

கிரேத்தரும், அரபியருமாகிய நாம் நம்முடைய பாஷைகளிலே இவர்கள் தேவனுடைய மகத்துவங்களைப் பேசக்கேட்கிறோமே என்றார்கள்.

அப் 10:46

பேதுருவோடேகூட வந்திருந்த விருத்தசேதனமுள்ள விசுவாசிகள் கேட்கும்போது, பரிசுத்தஆவியின் வரம் புறஜாதிகள்மேலும் பொழிந்தருளப்பட்டதைக்குறித்துப் பிரமித்தார்கள்.

பி-  3:3

ஏனெனில், மாம்சத்தின்மேல் நம்பிக்கையாயிராமல், ஆவியினாலே தேவனுக்கு ஆராதனைசெய்து, கிறிஸ்து இயேசுவுக்குள் மேன்மைபாராட்டுகிற நாமே விருத்தசேதனமுள்ளவர்கள்.

யோவான் 4:24

தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும் என்றார்.

# 14. நம்முடைய ஊழியத்திற்கான வல்லமையை தருகிறார்

1. ***ஊழியத்திற்கான அபிஷேகம்***

| | |
|---|---|
| அ. அபிஷேக எண்ணெய் | யாத் 30:22-33 |
| ஆ. பிரித்தெடுக்கப்படுதல் | லேவி 8:10-12, 30 |

GCI

**2. பழைய ஏற்பாட்டில் ஆவியானவரால் வல்லமை பெறுதல்**

| | |
|---|---|
| அ. எழுபது மூப்பர்கள் | எண் 11:17, 25-29 |
| ஆ. யோசுவா | உபா 34:9 |
| இ. ஒத்னியேல் | நியா 3:10 |
| ஈ. கிதியோன் | நியா 6:34 |
| உ. சிம்சோன் | நியா 14:6; 15:14 |
| ஊ. சவுல் | 1 சாமு 10:6, 9, 10 |
| எ. தாவீது | 1சாமு 16:13 |
| ஏ. சவு- ன் மனிதர் | 1சாமு 19: 20-23 |

**3. சுவிசேஷத்தில் ஆவியானவரால் வல்லமை பெறுதல்**

| | |
|---|---|
| அ. யோவான் ஸ்நானகன் | லூக் 1:15, 17 |
| ஆ.மரியாள் | லூக் 1:35 |
| இ. எ- சபத் | லூக் 1: 41-42 |
| ஈ. சகரியா | லூக் 1:67 |

**4. யோவான் ஸ்நானகன் இயேசுவை குறித்து கூறிய அறிக்கை**

லூக் 3:16

யோவான் எல்லாருக்கும் பிரதியுத்தரமாக: நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கிறேன், என்னிலும் வல்லவர் ஒருவர் வருகிறார், அவருடைய பாதரட்சைகளின் வாரை அவிழ்க்கிறதற்கும் நான் பாத்திரன் அல்ல, அவர் பரிசுத்தஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுப்பார்.

**5. பரிசுத்த ஆவியானவருடன் இயேசு கிறிஸ்து**

லூக் 3:21-22; 4:1, 14, 18

**6. பரிசுத்த ஆவியானவரைக் குறித்த இயேசு கிறிஸ்துவின் போதனை**

யோவான் 14:12-18

**7. மூன்று வருடங்களுக்கு பின் சீஷர்களின் நிலை**

லூக் 22:32

**8. உயிர்த்தெழுத□ன் நாளின் நிகழ்வுகள்**

GCI

லூக் 24:1, 13, 21, 33-51

லூக் 24:49

என் பிதா வாக்குத்தத்தம்பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார்.

**9. *சிலுவைக்குப் பின்...***

லூக் 24:45

அப்பொழுது வேதவாக்கியங்களை அறிந்துகொள்ளும்படி அவர்களுடைய மனதை அவர் திறந்து அவர்களை நோக்கி

யோவான் 20:22

அவர்கள்மேல் ஊதி: பரிசுத்தஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள்,

**10. *சிலுவைக்கு பின் பரிசுத்த ஆவியானவரின் நிரப்புதல்***

லூக் 24:49-51; அப் 1:1-9; 2:1-4

அப் 2:1-4

பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள்.

அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று.

அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள்போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது.
அவர்களெல்லாரும் பரிசுத்தஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்.

**11. *விளைவுகள்***

அப் 2:14-18, 33, 38-39; 4:8, 31, 33; 6:3, 5, 8

அப் 2:14-18, 33, 38-39

அப்பொழுது பேதுரு பதினொருவரோடுங்கூட நின்று, அவர்களை நோக்கி, உரத்த சத்தமாய்: யூதர்களே, எருசலேமில் வாசம்பண்ணுகிற ஜனங்களே, நீங்களெல்லாரும் அறிந்து கொள்வீர்களாக, என் வார்த்தைகளுக்குச் செவிகொடுங்கள்.

நீங்கள் நினைக்கிறபடி இவர்கள் வெறிகொண்டவர்களல்ல, பொழுது விடிந்து மூன்றாம் மணிவேளையாயிருக்கிறதே.

தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டபடியே இது நடந்தேறுகிறது.

கடைசிநாட்களில் நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும்

GCI

தீர்க்கதரிசனஞ்சொல்லுவார்கள்; உங்கள் வாலிபர் தரிசனங்களை அடைவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களைக் காண்பார்கள்;
என்னுடைய ஊழியக்காரர்மேலும், என்னுடைய ஊழியக்காரிகள்மேலும் அந்நாட்களில் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது அவர்கள் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்.

அவர் தேவனுடைய வலதுகரத்தினாலே உயர்த்தப்பட்டு, பிதா அருளிய வாக்குத்தத்தத்தின்படி பரிசுத்தஆவியைப்பெற்று, நீங்கள் இப்பொழுது காண்கிறதும் கேட்கிறதுமாகிய இதைப்பொழிந்தருளினார்.

பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்தஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்.
வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும் நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது என்று சொல்லி;

அப் 4:8, 31, 33

அப்பொழுது பேதுரு பரிசுத்தஆவியினாலே நிறைந்து, அவர்களை நோக்கி: ஜனத்தின் அதிகாரிகளே, இஸ்ரவேலின் மூப்பர்களே,

அவர்கள் ஜெபம்பண்ணினபோது, அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது, அவர்களெல்லாரும் பரிசுத்தஆவியினால் நிரப்பப்பட்டு, தேவவசனத்தைத் தைரியமாய்ச் சொன்னார்கள்.

கர்த்தராகிய இயேசுவின் உயிர்த்தெழுதலைக்குறித்து அப்போஸ்தலர்கள் மிகுந்த பலமாய்ச் சாட்சிகொடுத்தார்கள்; அவர்களெல்லார்மேலும் பூரண கிருபை உண்டாயிருந்தது.

அப் 6:3, 5, 8

ஆதலால் சகோதரரே, பரிசுத்தஆவியும் ஞானமும் நிறைந்து, நற்சாட்சி பெற்றிருக்கிற ஏழுபேரை உங்களில் தெரிந்துகொள்ளுங்கள்; அவர்களை இந்த வேலைக்காக ஏற்படுத்துவோம்.

இந்த யோசனை சபையாரெல்லாருக்கும் பிரியமாயிருந்தது. அப்பொழுது விசுவாசமும் பரிசுத்தஆவியும் நிறைந்தவனாகிய ஸ்தேவானையும், பிலிப்பையும், பிரொகோரையும், நிக்கானோரையும், தீமோனையும், பர்மெனாவையும், யூதமார்க்கத்தமைந்தவனான அந்தியோகியா பட்டணத்தானாகிய நிக்கொலாவையும் தெரிந்துகொண்டு,

ஸ்தேவான் விசுவாசத்தினாலும் வல்லமையினாலும் நிறைந்தவனாய் ஜனங்களுக்குள்ளே பெரிய அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தான்.

**12. பரிசுத்த ஆவியானவரின் மற்ற செயல்பாடுகள்**

அப் 8:5-18; 9:17; 10:44; 19:1-6

பேதுருவும் யோவானும் (அப் 8:5-18)

அப்பொழுது பிலிப்பென்பவன் சமாரியாவிலுள்ள ஒரு பட்டணத்திற்குப்போய், அங்குள்ளவர்களுக்குக் கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கித்தான்.

6. பிலிப்பு செய்த அதிசயங்களை ஜனங்கள் கேள்விப்பட்டுக் கண்டு, அவனால் சொல்லப்பட்டவைகளை ஒருமனப்பட்டுக் கவனித்தார்கள்.

7. அநேகரிலிருந்து அசுத்தஆவிகள் மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டு அவர்களை விட்டுப் புறப்பட்டது. அநேகந் திமிர்வாதக்காரரும் சப்பாணிகளும் குணமாக்கப்பட்டார்கள்.

8. அந்தப் பட்டணத்திலே மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று.

9. சீமோன் என்று மறுபேர்கொண்ட ஒரு மனுஷன் அந்தப் பட்டணத்திலே மாயவித்தைக்காரனாயிருந்து, தன்னை ஒரு பெரியவனென்று சொல்லி, சமாரியா நாட்டு ஜனங்களைப் பிரமிக்கப்பண்ணிக்கொண்டிருந்தான்.

10. தேவனுடைய பெரிதான சக்தி இவன்தான் என்று எண்ணி, சிறியோர் பெரியோர் யாவரும் அவனுக்குச் செவிகொடுத்துவந்தார்கள்.

11. அவன் அநேக காலமாய்த் தன்னுடைய மாயவித்தைகளினாலே அவர்களைப் பிரமிக்கப்பண்ணினதினால் அவனை மதித்துவந்தார்கள்.

12. தேவனுடைய ராஜ்யத்துக்கும் இயேசுகிறிஸ்துவினுடைய நாமத்துக்கும் ஏற்றவைகளைக்குறித்து, பிலிப்பு பிரசங்கித்ததை அவர்கள் விசுவாசித்தபோது, புருஷரும் ஸ்திரீகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள்.

13. அப்பொழுது சீமோனும் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்று, பிலிப்பைப் பற்றிக்கொண்டு, அவனால் நடந்த அடையாளங்களையும் பெரிய அற்புதங்களையும் கண்டு பிரமித்தான்.

14. சமாரியர் தேவவசனத்தை ஏற்றுக்கொண்டதை எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்கள் கேள்விப்பட்டு, பேதுருவையும் யோவானையும் அவர்களிடத்திற்கு அனுப்பினார்கள்.

15. இவர்கள் வந்தபொழுது அவர்களில் ஒருவனும் பரிசுத்தஆவியைப் பெறாமல் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானத்தைமாத்திரம் பெற்றிருந்தவர்களாகக் கண்டு,

16. அவர்கள் பரிசுத்தஆவியைப் பெற்றுக்கொள்ளும்படி அவர்களுக்காக ஜெபம்பண்ணி,

17. அவர்கள்மேல் கைகளை வைத்தார்கள், அப்பொழுது அவர்கள் பரிசுத்தஆவியைப் பெற்றார்கள்.

18. அப்போஸ்தலர் தங்கள் கைகளை அவர்கள்மேல் வைத்ததினால் பரிசுத்தஆவி தந்தருளப்படுகிறதைச் சீமோன் கண்டபோது, அவர்களிடத்தில் பணத்தைக் கொண்டுவந்து:

அனனியா அப் 9:17

அப்பொழுது அனனியா போய், வீட்டுக்குள் பிரவேசித்து, அவன்மேல் கையை வைத்து: சகோதரனாகிய சவுலே, நீ வந்தவழியிலே உனக்குத் தரிசனமான இயேசுவாகிய கர்த்தர், நீ பார்வையடையும்படிக்கும் பரிசுத்தஆவியினாலே நிரப்பப்படும்படிக்கும் என்னை அனுப்பினார் என்றான்.

பேதுரு அப் 10:44

இந்த வார்த்தைகளைப் பேதுரு பேசிக்கொண்டிருக்கையில் வசனத்தைக்கேட்டவர்கள் யாவர்மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார்.

பவுல் அப் 19:1-6

அப்பொல்லோ என்பவன் கொரிந்து பட்டணத்திலே இருக்கையில், பவுல்மேடான தேசங்கள் வழியாய்ப் போய், எபேசுவுக்கு வந்தான்; அங்கே சில சீஷரைக் கண்டு:



GCI

GCI

2. நீங்கள் விசுவாசிகளானபோது, பரிசுத்தஆவியைப் பெற்றீர்களா என்று கேட்டான். அதற்கு அவர்கள்: பரிசுத்தஆவி உண்டென்பதை நாங்கள் கேள்விப்படவே இல்லை என்றார்கள்.

3. அப்பொழுது அவன்: அப்படியானால் நீங்கள் எந்த ஞானஸ்நானம் பெற்றீர்கள் என்றான். அதற்கு அவர்கள்: யோவான் கொடுத்த ஞானஸ்நானம் பெற்றோம் என்றார்கள்.

4. அப்பொழுது பவுல்: யோவான் தனக்குப்பின் வருகிறவராகிய கிறிஸ்து இயேசுவில் விசுவாசிகளாயிருக்கவேண்டும் என்று ஜனங்களுக்குச் சொல்லி, மனந்திரும்புதலுக்கு ஏற்ற ஞானஸ்நானத்தைக் கொடுத்தானே என்றான்.

5. அதைக் கேட்டபோது அவர்கள் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றார்கள்.

6. அல்லாமலும் பவுல் அவர்கள்மேல் கைகளை வைத்தபோது, பரிசுத்தஆவி அவர்கள்மேல் வந்தார்; அப்பொழுது அவர்கள் அந்நியபாஷைகளைப் பேசித்தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள்.

### 13. பரிசுத்த ஆவியானவரை பெற்று கொள்ளுதல்

லூக் 11:11-13

உங்களில் தகப்பனாயிருக்கிற ஒருவனிடத்தில் மகன் அப்பங்கேட்டால், அவனுக்குக் கல்லைக் கொடுப்பானா? மீனைக் கேட்டால் மீனுக்குப் பதிலாய்ப் பாம்பைக் கொடுப்பானா?

அல்லது முட்டையைக் கேட்டால், அவனுக்குத் தேளைக் கொடுப்பானா? பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா என்றார்.

## நெருங்கிய தொடர்பு / ஐக்கியம் ⇒ எவ்வுளவு அதிகம் உங்களுக்கு வேண்டும்?